பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி-சென்னை-4

13 12 2025 7 15

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் ஜவுளித்துறை கடந்த 11 ஆண்டுகளில் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மணிப்பூரின் வளர்ச்சிக்கும் மக்களின் மேம்பாட்டுக்கும் அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

3. நாட்டின் வளர்ச்சியில் இளையோரின் பங்களிப்பு முக்கியமானது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

4. பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் நீர்நிலைகள் மேம்பாட்டில் இந்தியா சிறப்பாக செயல்பட்டு வருவதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

5. ஆசிய பாரா விளையாட்டு போட்டியில், வில்வித்தையில் இந்தியா 5 பதக்கங்களை வென்றுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

நாட்டின் ஜவுளித்துறை கடந்த 11 ஆண்டுகளில் சிறப்பான வளர்ச்சியைப் பெற்றுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங்கின் கட்டுரை ஒன்றை சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ள பிரதமர் இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

ஜவுளித்துறை வரலாற்றுச் சிறப்பு மிக்க மாற்றத்தைக் கண்டுள்ளது என்று பிரதமர் கூறியுள்ளார்.

உள்கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளதுடன், சந்தை திறன்களும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இத்துறையில் வேலைவாய்ப்புகளும், மகளிரின் பங்களிப்பும் அதிகரித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

ஜவுளித்துறையில் இந்தியாவின் போட்டித்தன்மை உலக அளவில் மேம்பட்டுள்ளதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மணிப்பூரின் வளர்ச்சிக்கும் மக்களின் மேம்பாட்டுக்கும் மத்திய அரசு உறுதியுடன் செயல்பட்டு வருவதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தின் சேனாபதி மாவட்டத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை நேற்று அவர் தொடங்கி வைத்து புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

மணிப்பூரில் அமைதியை நிலைநாட்ட அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு அனைத்து தரப்பினரும் ஆதரவு அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

மணிப்பூர் இயற்கை வளங்களையும், திறன் வாய்ந்த மக்களையும் கொண்டுள்ள மாநிலம் என்று அவர் கூறினார்.

இம்மாநிலத்தின் வளர்ச்சியை அதிகரிக்கவும், வளர்ச்சித் திட்டப் பலன்கள் அனைவரையும் சென்றடையவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக திருமதி திரௌபதி குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டின் வளர்ச்சியில் இளையோரின் பங்களிப்பு முக்கியமானது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறியுள்ளார்.

அந்தமானில் விடுதலைப் போராட்ட வீரர் வீர் சாவர்க்கரின் சிலை திறப்பு விழா நிகழ்ச்சியில் நேற்று அவர் பங்கேற்றார்.

தேசபக்தி, தியாகம், மன உறுதி ஆகியவற்றின் அடையாளமாக வீர சாவர்க்கர் திகழ்ந்ததாக அமைச்சர் கூறினார்.

வீர சாவர்க்கரின் வாழ்க்கை இளையோருக்கு முன்னுதாரணமாக அமையும் என்று அவர் தெரிவித்தார்.

சாவர்க்கரின் தொலைநோக்கு பார்வைகளை மத்திய அரசு முன்னெடுத்துச் செல்வதாக திரு. அமித் ஷா குறிப்பிட்டார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய ஆர்.எஸ்.எஸ். தலைவர் திரு. மோகன் பகவத், தற்போது திறக்கப்பட்டுள்ள இந்த சிலை தேசபக்தியின் அடையாளமாக திகழும் என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் அந்தமான் நிகோபார் தீவுகளின் துணைநிலை ஆளுநர் திரு. D.K. ஜோஷி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

<<<<>>>>

பல்லுயிர் பாதுகாப்பு மற்றும் நீர்நிலைகள் மேம்பாட்டில் இந்தியா சிறப்பாக செயல்பட்டு வருவதாக சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், நாட்டில் ஈரநிலங்களான ராம்சார் தளங்களின் பட்டியலில் மேலும் 2 இடங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ராஜஸ்தானில் உள்ள Siliserh ஏரி, சத்தீஸ்கரின் Kopra Jalsai நீர்த்தேக்கப் பகுதி ஆகியவை ராம்சார் தளங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன என்று கூறியுள்ளார்.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான அரசின் முயற்சிகளுக்கு இது சான்றாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது நாட்டில் ராம்சார் தளங்களின் எண்ணிக்கை 96ஆக அதிகரித்துள்ளது என்றும், 2014ஆம் ஆண்டில் இது 26ஆக மட்டுமே இருந்தது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடியின் சீரிய நடவடிக்கையின் காரணமாக நீர்நிலைகள் பாதுகாப்பில் இந்தியா முன்னேறி

வருவதாகவும், ராம்சார் தளங்களின் எண்ணிக்கை விரைவில் 100-ஐ எட்டும் என்றும் திரு. பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

நாட்டில் 2026ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் பிரதமரின் மக்கள் மருந்தகங்களின் எண்ணிக்கையை 25 ஆயிரமாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக ரசாயனம் மற்றும் உரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், தற்போது நாடு முழுவதும் 17 ஆயிரத்து 610 மக்கள் மருந்தகங்கள் செயல்பட்டு வருவதாக தெரிவித்தார்.

தமிழகத்தில் ஆயித்து 483 மருந்தகங்கள் செயல்படுவதாகவும் அவர் கூறினார்.

இந்த மருந்தகங்கள் மூலம் கடந்த 5 ஆண்டுகளில் 6 ஆயிரத்து 300 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனையாகியுள்ளதாகவும், இவற்றின் மூலம் மக்களுக்கு குறைந்த விலையில் தரமான மருந்துகள் கிடைப்பதாகவும் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறினார்.

<<<<>>>>

உலகளாவிய திரைப்பட படப்பிடிப்பு மையமாக இந்தியாவை மாற்ற மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு திரைத்துறையினர் அனுமதி நடவடிக்கைகளுக்காக India Cine Hub என்ற இணையதளத்தை மத்திய அரசு ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

படப்பிடிப்பு தளங்கள் தொடர்பான தகவல்களை இந்த தளத்தின் மூலமாக அறிந்துகொள்ள முடியும் என்று அவர் கூறினார்.

ஒலிப்பதிவு சட்டத்தின்கீழ் வெளிப்படையான திரைப்பட சான்றளிப்பு நடைமுறையை அரசு செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

கடந்த 5 ஆண்டுகளில் 72 ஆயிரம் படங்களுக்கு மத்திய திரைப்பட சான்றளிப்பு வாரியம் சான்றிதழ்களை வழங்கியுள்ளதாக டாக்டர் எல். முருகன் குறிப்பிட்டார்.

<<<<>>>>

மின்சார வாகன சார்ஜிங் கட்டமைப்பை அதிகரிக்க மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக கனரக தொழில்துறை இணையமைச்சர் திரு. பூபதி ராஜு சீனிவாச வர்மா கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், நாட்டில் இதுவரை 29 ஆயிரத்து 151 சார்ஜிங் கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

நெடுஞ்சாலைகளில் இவற்றை ஏற்படுத்த பிரதமரின் மின்சார வாகனப் போக்குவரத்து திட்டத்தின்கீழ் 2 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டில் நவீன பேட்டரி உற்பத்தியை அதிகரிக்க 18 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பில் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை திட்டத்தை கனரக தொழில்துறை அமைச்சகம் செயல்படுத்தி வருவதாக திரு. பூபதி ராஜு சீனிவாச வர்மா தெரிவித்தார்.

<<<<>>>>

சத்தீஸ்கர் மாநிலம் நக்சல் தீவிரவாதத்தில் இருந்து விரைவாக விடுபட்டு வருகிறது என்று அம்மாநில முதலமைச்சர் திரு. விஷ்ணு தியோ சாய் கூறியுள்ளார்.

ராய்ப்பூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 2 ஆண்டுகளில் மாநிலத்தில் 505 நக்சலைட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், 2 ஆயிரத்து 400 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், ஆயிரத்து 900 பேர் சரணடைந்துள்ளதாகவும் கூறினார்.

பிஜேபி அரசு பொறுப்பேற்ற பின் கடந்த 2 ஆண்டுகளில் பின்தங்கிய பகுதிகளில் வளர்ச்சித் திட்டங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சரணடைந்த நக்சலைட்டுகளுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டமும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக திரு. விஷ்ணு தியோ சாய் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தில்லியில் சாலை கட்டமைப்புகளை வலுப்படுத்த புதிய திட்டம் செயல்படுத்தப்படும் என்று முதலமைச்சர் திருமதி ரேகா குப்தா கூறியுள்ளார்.

சாலைகளில் ஏற்படும் தூசியைக் கட்டுப்படுத்த இந்நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

தில்லி முழுவதும் உள்கட்டமைப்பை மேம்படுத்த அதிக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக திருமதி ரேகா குப்பதா தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்தியப்பிரதேசத்தில் சுற்றுலாவை மேம்படுத்த மாநில அரசு முன்னுரிமை அளித்து வருவதாக முதலமைச்சர் திரு. மோகன் யாதவ் கூறியுள்ளார்.

தில்லியில் மூன்று நாட்கள் நடைபெறும் மத்தியப்பிரதேச சுற்றுலா கண்காட்சியை காணொலி மூலம் நேற்று அவர் தொடங்கி வைத்தார்.

மத்தியப்பிரதேசத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள் குறித்து தில்லி மக்கள் அறிந்துகொள்ள இந்தக் கண்காட்சி வாய்ப்பாக அமையும் என்று அவர் கூறினார்.

சுற்றுலா மேம்பாட்டில் மத்திய அரசுடன் மாநில அரசு இணைந்து செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

மகாபாரதம் தொடர்பான இடங்கள் மேம்படுத்தப்படும் என்று திரு. மோகன் யாதவ் கூறினார்.

<<<<>>>>

ஒடிசாவில் அரசுப் பணி நியமன நடைமுறைகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்படுகிறது என்று அம்மாநில முதலமைச்சர் திரு. மோகன் சரண் மாஜி கூறியுள்ளார்.

புவனேஸ்வரில் 500 பேருக்கு அரசுப் பணி நியமன ஆணைகளை அவர் வழங்கினார்.

மாநிலத்தில் பிஜேபி அரசு பொறுப்பேற்ற பின் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் 38 ஆயிரம் பேருக்கு அரசுப் பணிக்கான நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

அடுத்த 6 மாதங்களில் மேலும் 30 ஆயிரம் பேர் பணி நியமன ஆணைகளைப் பெறுவர் என்று அவர் கூறினார்.

மாநிலத்தில் கடந்த ஒன்றரை ஆண்டுகளில் முதலீடுகளும், தொழில் வளர்ச்சியும் அதிகரித்துள்ளதாகவும் திரு. மோகன் சரண் மாஜி குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டில் வட மாநிலங்களில் அடுத்த சில நாட்களுக்கு கடும் குளிர் நிலவும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வடமேற்குப் பகுதியில் குறைந்தபட்ச வெப்பநிலை 2 டிகிரி 3 டிகிரி செல்சியஸ் வரை குறையக்கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாராஷ்டிரா, சத்தீஸ்கட் உள்ளிட்ட மாநிலங்களிலும், வடகிழக்குப் பகுதிகளிலும் பனிமூட்டம் அதிகரித்து காணப்படும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

ஆசிய பாரா விளையாட்டு போட்டியில், வில்வித்தையில் இந்தியா நேற்று 2 தங்கம் உட்பட 5 பதக்கங்களை வென்றுள்ளது.

துபாயில் நடைபெறும் இப்போட்டியில் இந்தியா இதுவரை 16 தங்கம், 14 வெள்ளி, 15 வெண்கலம் என மொத்தம் 45 பதக்கங்களை வென்று, பதக்கப் பட்டியலில் 7வது இடத்தில் உள்ளது.

<<<<The End>>>>